www.padippakam.com



இனம். மொழி. சாதி என்கின்ற பிரச்சனை எல்லாமே மெத்தப்படித்த மேல்தட்டு வர்க்கத்தினரிடமிருந்தே தோற்றுவித்து பரப்பப்படுகின்றன.

— டானியல் —

**VADU** இதழ் 09 - 10 மார்ச் - ஏப்ரல் - 2008

தொடர்புகட்கு:-
F.D.S.D.S
70, SQUARE DES BAUVES
95140 GARGES LES GONESSE
France
(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)

நன்கொடை-1€
சந்தா வருடம் -15€
(தபாற்செலவு உட்பட)

இலங்கை. இந்திய வாசகர்களுக்கு இலவசம்.

வடிவமைப்பு - விஜி

கடந்த பெப்ரவரி 16 ம் 17 ம் திகதிகளில் லண்டனில் நடந்த எம்மாநாடு பூரண வெற்றி அளித்திருக்கின்றது. தலித்சமூக மேம்பாட்டு முன்னணியினரின் தொடர்ச்சியான உழைப்பும் எமது வடு வாசகர்களின் முழுமையான ஆதரவும் மற்றும் முற்போக்கு தோழமை அணிகளின் ஒத்துழைப்பும் இதனை சாத்தியப்படுத்தியிருக்கின்றன.

நாம் சென்ற வடு இதழின் ஆசிரிய தலையங்கத்தின் குறிப்பிட்டிருந்தது போல இலங்கையின் தேசியப் பிரச்சனைக்கு காணப்படப்போகின்ற அதிகாரப் பங்கீடுகளில் எமது தலித் மக்களின் இடம் என்ன? எனும் கேள்விகள் இம்மாநாட்டில் கடுமையாக எழுப்பப்பட்டது. எமது முன்னணியையும் அதனது முதலாவது மாநாட்டையும் கடுமையாக விமர்சித்த ஒரு சில தலித் உணர்வாளர்கள்கூட லண்டன் மாநாட்டின் ஊடாக எமது பயணத்தில் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். அங்கு இடம்பெற்ற உரையாடல்களும் விவாதங்களும் சமூக விடுதலையை நோக்கிய எமது பயணத்தில் அரசியல் அதிகாரத்தின் முக்கியத்துவம் உணர்ந்து கொள்ளப்படுவதன் அவசியத்தை வலியுறுத்துவனவாக அமைந்திருந்தன.

பாரிஸ் நகரில் இடம்பெற்ற மாநாட்டின் தொடர்ச்சியாக லண்டலில் இடம்பெற்ற இரண்டாவது மாநாடு மேலும் ஒரு படி நோக்கி எமது வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தும் தேவையை எமக்கு உணர்த்தியிருக்கின்றன. வடு வாசகர்களாகிய உங்களதும் புகலிடம் வாழ் தலித் மக்களினதும் பரவலான சிந்தனை ஓட்டத்தில் இருந்தே எமது முன்னணியின் எதிர்கால பாதையை வகுத்துக்கொள்ள வேண்டும் என்பதில் நாம் கவனமாக இருக்கின்றோம். ஆகவே விரைவில் ஐரோப்பாவின் இன்னுமொரு தேசத்தில் எமது மூன்றாவது தலித்மாநாட்டை நடத்துவதற்கான முயற்சிகளில் எமது முன்னணி களமிறங்கியுள்ளது. ஆகவே தலித் விடுதலையில் அக்கறை கொண்ட அனைவரையும் எம்முடன் கைகோர்க்குமாறு வடு சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்விதழில் இரண்டாவது மாநாட்டில் கலந்துகொள்ள முடியாது போன தோழமைகளுக்காக மாநாட்டுச் செய்திகள் பிரசுரமாகியுள்ளன. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொகுப்பு அறிக்கையையும் இந்த இதழ் தாங்கி வருகிறது. மீண்டும் அடுத்துவரும் புதிய இதழில் சந்திக்கும் வரை அன்புடன்

ஆ-ர்



படிப்பகம்

www.padippakam.com

# லண்டனில் இடம் பெற்ற இரண்டாவது தலித் மாநாட்டைத் தொடர்ந்து தலித் மேம்பாட்டு முன்னணியினர் வெளியிட்டுள்ள அறிக்கை.

கடந்த இரு வருடங்களாக ஐரோப்பாவை மையமாகக் கொண்டு இயங்கிவரும் இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினராகிய நாம் அண்மையில் லண்டனில் ஒரு பகிரங்க மாநாடு ஒன்றினை நடாத்தியிருந்தோம். புகலிடத்தில் சிறுசஞ்சிகைகள், இலக்கிய சந்திப்பு, பெண்கள் சந்திப்பு போன்ற மாற்று சிந்தனைகளுக்கான தளங்களினூடாக நீண்டகலாமாக உருவாகி வளர்ந்த தலித்தியம் எனும் சிந்தனைப்போக்கின் வளர்ச்சிக்கட்டமாகவே எமது தலித் மேம்பாட்டு முன்னணி முகிழ்ந்தது. நீண்டகாலமாக தமிழ் பேசும் மக்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கும், சமூகநீதி மறுப்புக்கும் ஆயுத கலாசார வன்முறை சூழலுக்கும் எதிராக செயற்பட்ட பல தோழமைகளின் அயராத முயற்சியினாலேயே எமது முன்னணி உருக்கொண்டது. அவ்வகையில் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்டு இலங்கையில் வாழும் எமது தலித் மக்களின் எதிர்கால சமூக மேம்பாடு குறித்த கருசனையே எமது முக்கிய வேலைத்திட்டமாக அமைந்துள்ளது. போரின் வீச்சுகளுக்குள் முகம்கொடுத்து எதிர்கால மீட்சி பற்றிய எவ்வகை வெளிச்சங்களுமின்றி வாழும் எமது தலித் மக்களின் எதிர்காலம் பற்றி நாம் அதீத சிரத்தை கொண்டுள்ளோம். சமாதான சூழல் ஒன்றோ, ஏதோ ஒரு வகையான தீர்வுத் திட்டங்களோ சாத்தியமாகின்ற பட்சத்தில் இந்த தலித் மக்களின் சமூக நிலை எப்படியிருக்கும் எனும் கேள்விகள் எம்மை கடும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

இதன்காரணமாக இலங்கையில் ஏற்படப் போகின்ற அதிகார கைமாற்றம், அதிகார பங்கீடு, அதிகார பரவலாக்கம் போன்ற நிர்வாகப் கட்டமைப்புகளுக்குள் தலித் மக்களின் இடம் என்ன? என்கின்ற கேள்விகளை நாம் பலமாக எழுப்பக் கடமைப்பட்டுள்ளோம். கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஸ்ருட்காட் (ஜேர்மனி) நகரில் இடம் பெற்ற (இலங்கை ஜனநாயக முன்னணி சார்பில்) இரு நாள் மாநாட்டில் நாமும் பங்கெடுத்தோம். அங்கு ஆனந்தசங்கரி போன்ற அரசியல் தலைவர்களும், ஐரோப்பிய மட்டத்தில் செயற்படும் அரசியல் ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள் என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு எங்களது முன்னணிசார்பில் அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமான எமது அறிக்கை ஒன்றினை சமர்ப்படுத்தியிருந்தோம். இதே போன்று புகலிடத்தில் நிகளும் ஜனநாயக அமர்வுகள் அனைத்திலும் எம்மால் முடிந்தவரை பங்கு கொண்டு எமது கோரிக்கைகளை வலுப்படுத்தி வருகின்றோம். எமது தலித் அரசியல் பற்றிய விழிப்புணர்வுகளையும், ஆழமான புரிதல்களையும் ஏற்படுத்தும் முயற்சியாக 'வடு' எனும் மாதாந்த சிறு இதழ் ஒன்றையும் எமது முன்னணி வெளியிட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் பரிஸ் நகரில் எமது முன்னணி உறுப்பினர்களை ஒன்று சேர்த்து வலுப்படுத்தும் நோக்கில் முதலாவது தலித்மாநாடு ஒன்றினை நடத்தியிருந்தோம். இதில் இலங்கையின் அரசியலில் ஈடுபாடு கொண்ட பலரும் கூட கலந்து கொண்டிருந்தனர். இருநாள் அமர்வின் இறுதியாக இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்தில் தலித் மக்களின் நிலை எனும் தலைப்பில் பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளிலிருந்து கலந்து கொண்ட ஆய்வாளர்களிடமிருந்து மூன்று வகையான ஆலோசனைகள் அடங்கிய திட்டங்கள் வெளியிடப்பட்டன. அவற்றினை ஒட்டி நிகழ்ந்த விவாதங்களின் பெறுபேறாக சில உடனடி கோரிக்கைகள் அடங்கிய தீமானங்களும் மாநாட்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த மாநாட்டின் தொடச்சியாக தலித் அரசியலில் ஈடுபாடு கொண்ட லண்டன் வாழ் தோழர்களின் உதவியுடன் அண்மையில் (பெப்ரவரி 16,17) இரண்டாவது தலித் மாநாட்டை ஏற்பாடு செய்ய முடிந்தது. இம்மாநாட்டிலும் இடம் பெற்ற உரையாடல்கள், விவாதங்கள், ஆலோசனைகள் என்பன எமது முன்னணியின் அவசியத்தையும் எமக்கு நன்குணர்த்தியுள்ளன. இவற்றின் பெறுபேறாக இம்மாநாடு அதில் பங்கெடுத்த



படிப்பகம்

பங்கேற்பாளர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் கீழ்வரும் தீர்மானங்களை உடனடி வேலைத்திட்டங்களாக நிறைவேற்றியுள்ளது.

***1. இலங்கையிலிருந்து வெளிவரும் வெகுஜன பத்திரிகைகளில் திருமண விளம்பரப்பகுதியில் இடம்பெறும் சாதி விளப்பரங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.***

எமது சமூகத்தில் சாதிகாப்பாற்றும் மனோபாவத்தை பகிரங்கமாகவே இவ்விளம்பரங்கள் ஊக்கிவித்து வருவதனாலும், மறைமுகமாக தாழ்த்தப்பட்ட தலித் மக்களை மன உளைச்சலுக்குள்ளாக்கி அவர்கள் மீது அர்த்தமற்ற குற்ற உணர்வினை உருவாக்கும் பிற்போக்குத்தனமான பணியை இவ்விளம்பரங்கள் மேற்கொண்டு வருவதனாலும், இத்திருமண விளம்பரங்கள் என்கின்ற பகுதியில் குறிப்பிடப்படுகின்ற சாதிரீதியான தேர்வுகளும் விருப்பங்களும் மனித உரிமை மீறல்களின் ஒரு அம்சமாகவே இம்மாநாடு கருதுகின்றது. ஆகவே மனித உரிமை பேணும் சமூதாயமொன்றை உருவாக்கும் முற்போக்கான எதிர்காலத்திற்கு வழிகாட்டவேண்டிய பொறுப்புமிக்க பத்திரிகைகள் உடனடியாக மேற்படி திருமண (சாதி) விளபம்பரங்களை வெளியிடும் பாரம்பரியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு இம்மாநாடு கோருகின்றது.

**2 நாட்டில் அமைதி கொண்டுவரும் ஏற்பாடுகளில் ஒன்றாக வடமாகாணத்திற்கான தற்காலிக நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்தும் முன்னேற்பாடுகள் நடைபெறுகின்றது. இந்நிர்வாக சபைக்கு நியமிக்கப்படவிருக்கும் ஐவர் அடங்கிய குழுவிற்கான தெரிவில் குறைந்த பட்சம் தலித் சமூகத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும்.**

தமிழ் சமூகம் சாதிரீதியான பாரிய முரண்பாட்டை இன்றுவரை கடைப்பிடித்து வருவதனை கருத்தில் கொண்டும், அதனூடாக மிகமோசமான சமூக ஒடுக்குமுறை இடம்பெற்று வருவது நிகழ்கால யதார்த்தமாயிருப்பதனாலும், இதுவரையான யுத்தம் ஏற்படுத்திய நேரடி, மறைமுக அனர்த்தங்களில் மிக மோசமான அளவில் பாதிக்கப்பட்டு அதிலிருந்து மீள்வதற்கான சமூக பொருளாதார வாய்ப்புக்கள் அற்ற சமூகமாக தலித் மக்கள் வாழ்ந்து வருவதனாலும், இன்றைய வடமாகான சனத்தொகையின் அடிப்படையில் அங்கு வாழும் மக்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் தலித் மக்களாகக் காணப்படுவதனை கருத்தில் கொண்டு அதற்கான பிரதிநிதித்துவம் மறுக்கப்படக்கூடாது என்கின்ற ஜனநாயக விழுமியங்களை கவனத்தில் கொண்டும், வடமாகாணத்திற்காக ஏற்படுத்தப்படப் போகின்ற இடைக்கால நிர்வாக சபையில் தலித் சமூகத்தின் பிரதிநிதியாக குறைந்த பட்சம் ஒருவராவது நியமிக்கப்பட வேண்டும் என இம்மாநாடு பகிரங்க கோரிக்கை விடுக்கின்றது

மேற்படி மாநாட்டின் தீர்மானங்கள் அந்த இரு நாள் அமர்வுகளிலும் கலந்துகொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட பேராளர்களின் முழு ஒப்புதலோடு தீர்மானிக்கப்பட்டவை என்பதை சகலருக்கும் அறியத் தருவதோடு, எமது இத்தீர்மானங்களை நிறைவேற்ற சர்வதேசமெங்கும் பரந்து வாழும் தலித் உணர்வாளர்களையும், முற்போக்கு சக்திகளையும் எமது தலித் சமூக மேம்பாட்டு முன்னணி வினயமாகக் கேட்டுக்கொள்கிறது.

பொதுத்தொண்டில் கூட நமக்குள் கட்சிப் பிரதிக்கட்சி வீண் எதிர்ப்புகள் இருத்தல் கூடாது. சகோதரத்துவ முறையிலேயே தொண்டாற்ற வேண்டும். என்னைக் கேட்டால் ஒரே மேடையில் ஒரு இராமயாணக் காரரும் ஒரு பெரியபுராணக் காரரும் காங்கிரஸ் காரரும் நாமும் கலந்து பேச வேண்டும். பார்ப்பனரும் நம்மேடையில் பேச வேண்டும். அவரவர் கருத்தை எடுத்துக் கூறவேண்டும். மக்கள் அதைக் கேட்கவேண்டும். சிந்தித்து அவரவர்களின் முடிவிற்கு செயலாற்ற வேண்டும். அந்தளவிற்கு மக்களிடத்திலேயே மனமாறுதல் ஏற்பட வேண்டும் என்பதே என் எண்ணம்.

- பெரியார்-

www.padippakam.com

# நினைவுக்குறிப்புகள்

## - தோழர் . யோகரெட்ணம் -

# 05



**1966-67** இல் "தீப்பொறி" என்ற பத்திரிகை வெளிவந்தது. அதன் ஆசிரியராக தோழர் எம்.கே.அந்தனிசிவா கடமையாற்றினார். 'தீப்பொறி' யின் வாசிப்பு எமக்கு மிக உற்சாகத்தைக் கொடுக்கும். மிகவும் உணர்வு பூர்வமான செய்திகளையும் எதுகை மோனை மொழிநடையில் நக்கலும், நளினமுமாக வெளிவரும் பத்திரிகை அது. அதில் வரும் ஒரு வரி இன்றும் என் மனதில் வேப்பமரத்துப் பிசினைப்போல அப்பிக்கிடக்குது.

**"பாளையைச் சீவிடும் கைக்குப் புதுப்பணி**
**பார்த்துக்கிடக்குதடா - அந் நாய்களின்**
**வாலை சீவி நறுக்கும் நாளும்**
**நெருங்குதடா......."**

இதுதான் அவ்வரிகள்.

இப்பாடலை அடிக்கடி நண்பர்களுடன் சேர்ந்து பாடி மகிழ்வேன். அப்பத்திரிகை சில நேரம் கிடைக்காமல் போவதும் வழமை. மாலை நேரத்தில் சங்கானை சந்தியில் உள்ள இரத்தினசிங்கம் - துரைசிங்கம் எனும் இரட்டையர்களின் தேனீர்கடையில் இளைஞர்கள் கூடுவார்கள்.. வசதியான நேரங்களில் நானும் போய் வருவேன். அப்போதுதான் கவிஞர் சுபத்திரன் கவிதைகளான

**எச்சாமம் வந்து எதிரி நுழைந்தாலும்**
**நிற்சாமம் கண்கள் நெருப்பெறிந்து நீறாகும்..**
**குச்சு குடிலில் கொலுவிருக்கும் கோபத்தை**
**மெச்சுகிறேன்...**

எனும் வரிகள் கொண்ட கவிதைகளை படிக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

***சங்கானைக்கென் வணக்கம் - சரித்திரத்தில் உன்நாமம்***
***மங்காது வையகத்தில் மண்ணில் பல காலம்***
***.............***
***சாதித்திமிருடன் வாழும் தமிழர் பாதித் தமிழரடா***

போன்ற மேலும் சில பாடல்களை தோழர் சங்கானை பசுபதியின் மகன்மார் மேடைகளில் பாடுவார்கள்.

சங்கானை பொலிஸ் சார்ஜண்டாக அன்று இருந்தவர் உரும்பிராய் தாமோதரம் பிள்ளை. (பின்நாளில் இன்ஸ்பெக்டர்) அவன் ஒரு தடிப்பான சாதிவெறியன். தனது சாதிவெறியை பொலிஸ் எனும் அதிகார போதையுடன் தலித் மக்கள் மீது கண்மண் தெரியாமல் அள்ளி வீசுவான்.. ஒரு நாள் நிற்சாமத்துக்குள் சென்ற பொலிஸ்படை இளம் தலித் வாலிபர்களை கைது செய்ய முற்பட்டபோது சில தலித் வாலிபர்கள் பயத்தால் ஓடமுயன்றனர். அக்கணத்தில் தான் வைத்திருக்கும் ரிவால்வரை எடுத்து சுட ஆயத்தமானான் சார்ஜண்ட் தாமோதரம் பிள்ளை. இதனை அவதானித்த மகேஸ்வரி என்ற தலித் சகோதரி சார்ஜண்ட் தாமோதரம் பிள்ளையை அப்படியே லபக்கென இறுக கட்டிப்பிடித்து துப்பாக்கியை பறிக்க முயற்ச்சி செய்தாள். இதனால் கோபமும் அவமானமம் கொண்ட சார்ஜண்ட் அப்பெண்ணை கைதுசெய்து பொலிஸ் காவலில் வைத்தான்.

## நிற்சாமம் மகேஸ்வரி

இப்பெண்ணின் துணிச்லான செயலின் பின்புலமே 'குச்சு குடிலில் கொலுவிருக்கும் கோபத்தை மெச்சுகிறேன;' எனும் வரிகள் பிறக்கக் காரணமாக இருந்தது கவிஞர் சுபத்திரனுக்கு. தமிழ் அரசியல் வரலாற்றின் முதல் பெண் போராளியாக மகேஸ்வரியையே நான் பிரகடனப் படுத்துவேன். அஜானபாகுவான தோற்றம், அஞ்சாமை, சாதித்துவத்துக்கெதிரான அவரது செயல்பாடுகள், பொலிஸ் அராஜகத்தை முறியடிக்க முனைந்த செயல்கள் என மகேஸ்வரியின் கதைகளே ஊரில் உலாவும்.தனது துப்பாக்கியை பறிக்க முனைந்ததால் கோபமுற்ற

# தீண்டாமைக் கொடூரங்களும்
# தீ மூண்ட நாட்களும்



படிப்பகம்

www.padippakam.com

# பேசாமல் விட்டால் நாம்...

-பசுபதி-
(ஜேர்மன்)

ஊரில் உள்ள கந்தசாமி கோவிலுக்கு
கூட்டிச்சென்றாள் அப்பாச்சி.
கோவிலுக்கு வெளியில் நின்று
கும்பிடு போட்டாள் கண்ணைமூடி
எட்டுவயசுப் பையன் நான் எதுவுமறியாது
எட்டி வைத்துவிட்டேன் கோவிலுக்குள் காலை
"தொம்" என்று விழுந்தது முதுகில் ஐந்துவிரல்
தடம்
பக்தி பறந்து போன கண்ணில் பயம் வந்து
மேலாட
கட்டையில போனவனே எதுக்கடா உள்ளே
போனாய் என்றாள்
அப்பாச்சி
அடிவாங்கிய நான் ஏன் அடித்தாய் என்றேன்
ஏகத்தாளமாய்
அவங்கட கோவிலடா அழிவானே என்றாள்
அப்ப வல்லியப்பா கோவிலுக்கை போனோமே
என்றேன்
வல்லியப்பர் நம்மட கடவுளடா என்றாள்
அன்பாக
அப்ப, நாகம்மாள் கோவிலுக்குள் போனோமே
என்றேன்
பேசாம வாடா பெருங்கரைச்சல் பிடித்தவனே
என்றாள்
பேசாம இருந்து தான் பிணமாக
வாழ்கின்றோம்

---

தாமோதரம்பிள்ளை மகேஸ்வரி மீது பல பொய் வழக்குகளை புனைந்து துன்புறுத்தி வந்தான். இதன் காரணமாகவே மகேஸ்வரியின் கணவன் விசமருந்தி தற்கொலை செய்து கொண்டார்.
இருந்தபோதும் மகேஸ்வரி அவர்கள் சமூகப் போராட்டத்திலிருந்து ஒதுங்கிப் போய்விடவில்லை.
மல்லாகம் நீதி மன்றம் ஊருக்குள் உன் தலைக்கறுப்புத் தெரியக்கூடாது என மகேஸ்வரியை கண்டித்தது. பலவகையான இடையூறுகளுக்கு மத்தியிலும் தொடர்ந்து சமூகப் பணிபுரிந்த நிற்சாமம் மகேஸ்வரி ஒரு சமூகவிடுதலைப் போராளியே.

சார்ஜண்ட் தாமோதரத்தின் துப்பாக்கியை பறிக்க முனைந்த மகேஸ்வரியின் வீரம்மிக்க துணிச்சலான செயலை அந்த நாட்களில் பலரும் வியப்புடன் கதைத்துக்கொண்டனர். மகேஸ்வரியின் துணிச்சலான செயல்பாட்டின் காரணமாகவே பல தலித் வாலிபர்கள் பொலிஸ் தாக்குதலில் இருந்து தப்பிக்கொண்டனர்.
நிற்சாம மக்களின் நன்மதிப்புக்குரிய இன்னுமொருவர் அயலில் இருந்தார். அவர் மார்க்ஸிய சிந்தனைவாதியாகவும், கம்யுனிஸ் கட்சியின் தீவிர தோழனாகவும், சங்கானை பட்டினசபை தலைவராகவும் செயல்பட்டு வந்தவர்.. அவர்தான் மான் (man)என எல்லோராலும் சுருக்கமாக அழைக்கப்பட்ட நா.முத்தையா அவர்களாகும். தலித் சமூக விடுதலைக்கு தனது காத்திரமான பங்களிப்பை பகிரங்கமாக வெளிக்காட்டியவர் மான் அவர்கள். இவரின் தலித் சமூக ஆதரவுப் போக்கை அவரின் உறவினர்கள் வெறுத்தனர். அவரின் வீட்டை உடைத்தும் அவரைத் தாக்கியும், தங்களின் அயலிலிருந்தும் துரத்தினர். தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் இடப்பெயர்வுக்கு உள்ளான முதல் உயர்சாதிக்காரன் மான் முத்தையா என்றால் மிகையாகாது.

யாழ்.முனிஸ்வரன் வீதியிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் வசந்தம் புத்தக நிலையத்தில் தோழர் முத்தையா அவர்கள் பொறுப்பாளராக இருந்து செயல்பட்டபோது அவரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவரின் உயர்வான எண்ணங்கள், செயல்கள் அனைத்தும் தோழமையுடன் இரண்டற கலந்தது. கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவுகளின் பிற்பாடு மான் முத்தையா அவர்கள் தோழர் டானியலுடன் மிக நெருக்கமாகப் பழகியதைக் காணமுடிந்தது. தோழர் கே.டானியலின் ";கராஜ்" இல் தோழர் நா.முத்தையா பின்னாளில் கணக்காளராக கடமையாற்றிய போதும் பலமுறை அவருடன் சந்தித்து உரையாடும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தது.

எனக்கு கம்யுனிஸ்ட்கள் சிந்தாந்த ரீதியில் பிளவுபட்டதனைப்பற்றி அன்று கவலையில்லை. தீண்டாமைகெதிரான போராட்டத்தில் முன் நிற்பவர்கள், நின்றவர்கள் பிளவுபட்டதுதான் மிகவும் கவலையானது.
அன்றைய சாதிய எதிப்புப் போராட்டமானது மூன்று பிரிவாக செயல்பட்டது. ஒன்று சாத்வீகப் போராட்டமாக எம்.சி. சுப்ரமணியம் தலைமையிலும், ஆயுதப் போராட்டம் எனும் கருத்தியலில் எஸ்.ரி நவரட்ணம் தலைமையிலும், மத மாற்றம் தான் தீண்டாமையை ஒழிக்க வழிஎனும் கருத்தியலில் திரு வைரமுத்து தலைமையிலென மூன்றுவகைக் கருத்தியல் பிளவுகளுடன்தான் அன்றைய சாதிய எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. எஸ்.ரி.என்., வைரமுத்து போன்றவர்களின் 'தாய் வீடாக' இருந்தது சிறுபான்மைத் தமிழர் மகாசபைதான். அன்றைய சாதிய எதிர்ப்புப் போராட்டமானது குடாநாடு பூராகவும் பரபரப்பாகவே பேசப்படடு வந்தது.

தொடரும்.....



படிப்பகம்

www.padippakam.com

# தோழர் கே.டானியல்

பிறப்பு - **15-04-1927**

இறப்பு - **23-03-1986**



தோழர் கே.டானியல் அவர்கள் மறைந்து 22 வருடங்கள் கடந்து விட்டன. அவர் பல்வேறு வியாதிகளால் மிகவும் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் 23-03-1986 ஆம் ஆண்டு இந்தியாவில் காலமானார். தோழர் கே டானியல் அவர்கள் தொழிலாள வர்க்கப் போராட்டப் பாதையில் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்தவர். அக்கொள்கையினூடாகவே சாதிய ஒடுக்குமுறையையும் தகர்க்க முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்.

இலங்கையில் மேலாதிக்க சாதியினரால் மேற்கொள்ளப்பட்ட தலித் சமூக ஒடுக்குமுறைகள் பரவலாக பலராலும் அறியப்படாமலேயே நீண்டகாலங்கள் நகர்ந்தன. இருப்பினும் சில சாதிய ஒடுக்குமுறைச் சம்பவங்கள் கலவரங்களாகவும், படுகொலைகளாகவும் நிகழ்ந்தபோது அவை ஊடகத்துறை நலன்கள் சார்ந்த செய்திகளாக மட்டுமே அறியக்கூடியதாகவும் இருந்து வந்தது. தோழர் கே. டானியல் அவர்கள் தனது இலக்கியப் படைப்பாற்றலினூடாக சாதிய மேலாதிக்க ஒடுக்குமுறைகளை அம்பலப்படுத்தினார். அவை வெறும் செய்திகளாக அல்லாது தலித் சமூக அவலங்களை வாசகர்களின் உணர்வுகளிலும் மனங்களிலும் ஆழமாகச் சென்றுறையும் படைப்பாற்றல் தன்மை கொண்டவையாகத் துலங்குகிறது. அதற்கு அவரது 'பஞ்சமர்' நாவல் ஓர் சாட்சியம் எனலாம். தமிழக தலித் இலக்கியப் படைப்பாளிகள் ,விமர்சகர்கள் என பலரும் தமிழில் தலித் இலக்கிய முன்னோடியென தோழர் கே.டானியலையே உரிமை கோருவதையும் நாம் காணலாம்.

அவ்வாறான ஓர் சமூகப்போராளியை இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினராகிய நாம் நினைவு கோரக் கடமைப்பட்டவர்கள். எமது இன்றைய செயல்பாட்டிற்கு தோழர் கே.டானியலின் இலக்கியப் படைப்பும் ஓர் உந்து சக்தி என்பதை எம்மால் உணரக்கூடியதாகவே இருக்கிறது. பேசப்படும் தமிழ் தேசியம், தமிழ்த் தேசிய விடுதலை எனும் கருத்து நிலையை கேள்விக்குள்ளாக்கும் நிலைக்கு எமக்கு நீண்டகால அனுபவங்கள் தேவைப்பட்டது. தோழர் கே.டானியல் அவர்கள் தனி ஈழக் கோரிக்கை சம்பந்தமாகவும், தமிழ்த் தேசிய விடுதலை பற்றியும் 1982 ஆம் ஆண்டுகளிலேயே மாற்றுக் கருத்துடையவராகவே இருந்து வந்துள்ளார். அவரது நேர்காணல் குறிப்பொன்றிலிருந்து அவரது தனி ஈழம் சார்ந்த நிலைப்பாட்டை நாம் காணலாம்.

கேள்வி... *தனி ஈழக் கோரிக்கை சாத்தியமா?*

கே.டானியல். *இல்லை.*

**கேள்வி:-** *தனி ஈழத் தீவிரவாத 'விடுதலைப்புலிகள்' இளைஞர்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?*

**கே.டானியல்:-**
*இப்போதைய தமிழ் இளைஞர்களுடைய இயக்கமானது., அடிப்படையில் நாட்டுப் பிரிவினையை ஆதாரமாகக் கொண்டது எனக் கருதக்கூடியது. ஏற்கனவே சிங்கள மக்களிடமிருந்து வெறுப்பு அதிகரிக்கக் கூடிய செயல்பாட்டை உள்ளடக்கியதாகவும் நிற்கிறது. 1971 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த 'செகுவரா' இயக்கத்தினுடைய தவறான படிப்பினையை இவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாதது வருந்தற்குரியது. முழு நாட்டினுடைய பொதுவான விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்கு இது இடைஞ்சலாக இல்லை என்று இன்று அவர்களாலேயே துணிந்து கூறிவிட முடியாத ஒன்றாகும். எந்த இனம் உரிமை பெறுவதாக இருந்தாலும், அந்த இனம் நாட்டிற்குப் பொதுவான வர்க்க நிலைப்பாடுகளை முன்னெடுத்துச் செல்லாத பட்டசத்தில் அது வெற்றிபெற முடியாதென்பதும் என்னுடைய அபிப்பிரயமாகும். உதாரணத்துக்கு இன்றைய உலக நாடுகளில் தோன்றியுள்ள இது போன்ற இயக்கங்கள் முன்னேற முடியாமல் தவிப்பதை இவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். மற்றது தமிழர்களைத் தலைமைதாங்கி நடத்தக் கூடிய தலைவர்கள், தனியாக இன ரீதியிலான அரசியலை நீண்ட காலமாக வளர்த்து வந்ததன் பிரதிபலிப்பே இவர்கள் எனச் சொல்லலாம். இதை இன்றைய தமிழர்களும், பொதுவில் சிங்களப் பகுதியில் இருக்கக் கூடிய நல்லெண்ணம் கொண்ட சிங்களவர்களும் ஆழமாக யோசிப்பதற்கான அறிகுறிகள் தென்படுவது விரும்புதற்குரியது. வகுப்புவாதச் செயல்பாடுகளினால் நடந்து முடிந்து விட்ட சம்பவங்களை, முன்பு எப்போதையும் விட இன்று இலங்கையில் சகல மக்களும் கவலையுடன் நோக்குகின்றனர். சிங்களவர்களில் குறிப்பிடக்கூடிய பல புத்த சந்நியாசிகள், கல்விமான்கள், நிண்டகாலமாக இடது சாரி அரசியல் உணர்வு கொண்டவர்கள் ஆகியோர் ஆங்காங்கே கண்டனங்கள் தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்த நல்ல சூழ்நிலையைக் கெடுப்பது தீர்க்கதரிசனமான ஒரு அரசியல் பார்வை ஆகாது.*
(நன்றி கே.டானியல் கடிதங்கள் தொகுப்பு அ.மார்க்ஸ்).



படிப்பகம்






பிரான்சில் நடைபெற்ற முதலாவது தலித் மாநாட்டைத் தொடர்ந்து,இரண்டாவது தலித் மாநாடு லண்டனிலும் சிறப்புடனும், பல விவாதங்களுடனும் நடந்து முடிந்தது. கடந்த பெப்ரவரி 16ஆம்17ஆம் திகதிகளில் லண்டனிலுள்ள LEYTONSTON எனும் சுரங்கப்பாதை புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலுள்ள QUACKERS HOUSE எனும் மண்டபத்தில் மாநாடு நடைபெற்றது. ஏற்கனவே தயாரித்த நிகழ்ச்சிநிரலில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. இலங்கையிலிருந்து அழைக்கப்பட்ட புதியஜனநாயக் கட்சி உறுப்பினரான தோழர் ந.ரவீந்திரனும் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்ட அ.மார்க்ஸ் அவர்களும் நேரடியாகக் கலந்து கொள்ளமுடியாது போனது. இருப்பினும் தோழர் ரவீந்திரனும், அ. மார்க்சும் காத்திரமான கட்டுரைகளை மாநாட்டுக்கு அனுப்பிவைத்தனர். குறிப்பாக அ.மார்க்ஸ் அவர்கள் கட்டுரையாகவும் ஒலி வடிவத்திலும் தனது கட்டுரையை அனுப்பிவைத்தார்.



முதல் நாள் கலந்து கொண்டவர்களின் சுய அறிமுகத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. பிரான்சில் நடைபெற்ற முதலாவது மாநாட்டில் கலந்து கொண்ட தோழர் பரா மாஸ்டர் அவர்கள் இரண்டாவது மாநாடு நடைபெறும்போது எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். அவரை நினைவுகொண்டும் கடந்த காலத்தில் தலித் சமூக விடுதலைப்போராட்டத்தில் களப்பலியானவர்களையும் மனதில் இருத்தி சில நிமிட நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. அதைத்தொடர்ந்து இலங்கைத் தலித் சமூக விடுதலை முன்னணியின் தலைவர் தேவதாசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். பிற்பாடு அவரின் தலைமையிலேயே தோழர் ந.ரவீந்திரனின் கட்டுரையை 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையின் ஆசிரியர் எம்.பௌசர் அவர்கள் வாசித்தார். அதைத்தொடர்ந்து புஸ்பராணி அவர்கள் சாதியமும் பெண்களும் எனும் தலைப்பில் பேசினார்.



தோழர் ரவிந்திரன் அவர்கள் இலங்கையில் சாதியம் எவ்வாறு காப்பாற்றப்பட்டு வருகிறது என்பதை பல ஆதாரங்களுடன் தனது கட்டுரையில் வெளிப்படுத்தியிருந்தார். யுத்த சூழலில் மறைந்து உறைந்து நீறுபூத்துக் கிடந்த சாதியமானது சில கால சமாதானச் சூழலில் சாதிய ஒடுக்கமுறையாக கொழுந்துவிட்டெரிந்த சம்பவங்களை விபரித்துள்ளார். யாழ்ப்பாண மாநகர முதல்வராயிருந்த செல்லையன் கந்தையாவிற்கு நிகழ்ந்த சம்பவமும், அண்மையில் கொலைசெய்யப்பட்ட புலிகளின் சுப. தமிழ்ச்செல்வனின் மரணத்திலும் கூட சாதியம் பின்னணியாக இருந்திருக்கும் என 'தேசிய எழுச்சியின் இன்றைய போக்கில் தலித் பிரச்சனை' என்ற தலைப்பிட்ட தனது கட்டுரையில் விபரிக்கிறார். சாதியமும் பெண்களும் எனும் தலைப்பில் உரையாற்றிய புஸ்பராணி

www.padippakam.com

அவர்கள் புகலிடத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சாதியப்பிரச்சனைகள் பற்றிய தனது அனுபங்களை எடுத்துக் கூறினார்.

இரண்டாவது நிகழ்ச்சியாக தோழர் வேலுவின் தலைமையில் இந்தியாவிலிருந்து வருகைதந்த 'புதியவிசை' சஞ்சிகையின் ஆசிரியர் ஆதவன் தீட்சண்யா அவர்கள் தலித்தியமும் இலக்கியமும் எனும் தலைப்பில் உரையாற்றினார். "இங்கிலாந்துக்கு வந்திருக்கும் இந்தக்கணத்தில் நான் இந்தியாவிலிருந்து வந்திருப்பதாய் சொல்லுவது எனது பூர்வீகத்தை உணர்த்திடப் போதுமானதாய் இருக்கலாம். ஆனால் இந்தியாவிற்குள் என்னை இந்தியன் என்று சொல்லிக் கொள்வதற்கான அவசியம் எதுவும் நேர்ந்ததாக நினைவில் இல்லை. இதேகதிதான் தமிழன் என்பதற்கும் ஒரு பொது அடையாளம் போல் தோற்றமளிக்கும் இந்த வார்த்தைகள் தலித்துக்களைப் பொறுத்தவரை அன்னியமானவை." என அவரது கட்டுரை தொடங்குகிறது. அதைத்தொடர்ந்து அ.மார்க்சின் கட்டுரையின் ஒலிப்பதிவு கேட்கப்பட்டது. அவரின் கட்டுரையின் தலைப்பு 'தலித்தியம் எதிர்கொள்ளும் சமகாலச் சவால்கள்.'

**இதைத்தொடர்ந்து கலந்துரையாடல் நிகழ்ந்தது.**

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக அசுராவின் தலைமையில் 'இலங்கைத் தலித் சமூக அரசியலும், அதன் அவசியமும்' எனும் தலைப்பில் தேவதாசன் அவர்கள் உரையாற்றினார். கடந்தகால தலித் சமூக விடுதலைப் போராட்டத்திற்கு இடது சாரிகளின் பின்புலமும் அவர்களின் பங்களிப்பும் காத்திரமானதாகவே இருந்ததையும் சுட்டிக்காட்டினார். அன்றைய காலகட்டத்தில் இடது சாரிகள் தமது கட்சியின் நிலைப்பாட்டிற்கே முதன்மை இடமளித்தமையாலேயே தலித் மக்களின் பிரச்சனைகளை அவர்கள் தனித்துவமாக பார்க்கத் தவறிவிட்டார்கள் எனவும் குறிப்பிட்டுப்பேசினார். இதைத்தொடர்ந்தும் கலந்துரையாடல் நிகழ்ந்தது. கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானோர் தலித்மக்களின் பிரச்சனைகளுக்கு தனித்துவமான அரசியல் உத்தரவாதங்கள் பேணப்படவேண்டும் என்பது பற்றிய தமது அபிப்பிராயங்களை எடுத்துக் கூறினார்கள். இருப்பினும் இலங்கைத் தலித் சமூக முன்னணியானது மார்க்சிய விரோதச் செயல்பாட்டுத் தளத்தில் இயங்குகிறதா எனும் சந்தேகமும் சிலரிடம் இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. இடதுசாரிகளின் வர்க்கப்பார்வையினாலான அணுகுமுறையே தலித் மக்களின் தனித்துவமான பிரச்சனைகளை அணுகத் தடையானது. எனவே மார்க்சியத்தின் போதாமைகளை இடதுசாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டுமேயல்லாது. இடது சாரிகள் மீது நாம் என்றுமே விரோதிகள் அல்ல விமர்சகர்கள் மட்டுமே என்பதை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினர் சுட்டிக்காட்டினார்கள். இறுதி நிகழ்ச்சியாக ஓர் நாடகமும் கிழக்குமாகாணப் பாரம்பரியக் கூத்துப்பாடல்களும் நடைபெற்றது. நாடகத்தில் கே.கிருஸ்ணராஜா, நிர்மலா, நவரா ணராணி, சாந்தன் போன்றோர் பங்கு பற்றினர்.







இலங்கையின் சாதிக்கொடுமைகள் பற்றி டானியல் இவ்வாறு சொல்கிறார்...

"சென்ற ஆண்டு 'எழுதுமட்டுவாள்' என்ற இடத்தில் பள்ளிக்கூடம் போன தாழ்ந்த சாதி பிள்ளைகளின் புத்தகங்கள், நோட்டுக்கள், சிலேட்டுக்கள் ஆகியவற்றை பிடுங்கி நொருக்கி குவித்து எரித்திருக்கிறார்கள் உயர்சாதி வகுப்பு வெறியர்கள். யாழ்ப்பாண நூல்நிலையத்தை சிங்கள இனவெறியர்கள் கொழுத்துவதற்கு காட்டுகிற நியாயம் தமிழர்கள் படித்து முன்னேறி சிங்களவருக்கு மேலாக வந்துவிடுகிறார்கள் என்பது.

தாழ்ந்த சாதி மக்கள் படித்து முன்னேறி உயர்ந்தசாதியினருக்கு மேலாக வருவதை தடுப்பதற்காக அவர்களது புத்தகங்களைப் பிடிங்கிக் கொழுத்துவது நியாயம் என்றால், யாழ்ப்பாண நூல் நிலையத்தை கொழுத்திய கொடுமையும் நியாயம்தானே! காரியாம்சத்தைப் பொறுத்தமட்டில் இரண்டும் ஒன்றுதானே!"



படிப்பகம்

www.padippakam.com

# சர்வகட்சி பிரதிநிதிகள் குழுத்தலைவர் திஸவிதாரண விடம் தலித் அறிக்கை கையளிப்பு



6-4-2008 ஞாயிறு லண்டனில் இலங்கை ஜனநாய ஒன்றியம் ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் இலங்கை அரசியல் தீர்வுக்கான சர்வகட்சிப் பிரதிநிதகள் குழுவைச்சேர்ந்த 12 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அதன் தலைவர் திஸ விதாரணவும் கலந்துகொண்டார்.

இச்சந்திப்பின் ஏற்பாட்டாளர்களான இலங்கை ஜனநாயக ஒன்றியமானது இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரையும் அழைத்திருந்தனர். இக்கலந்துரையாடலில் தலித் சமூகமேம்பாட்டு முன்னணியின் சார்பாக தலைவர் தேவதாசன் அவர்கள் உரையாற்றியதோடு தலித் அரசியல் அறிக்கை ஒன்றையும் கையளித்தார்.
"தலித் அறிக்கை" கையளிக்க முன் ஆற்றப்பட்ட உரை வருமாறு.

மதிப்புக்குரிய திஸ்ஸ விதாரண அவர்களுக்கும், சர்வகட்சி பிரதிநிதிகளுக்கும் மற்றும் சபையினருக்கும் வணக்கம்.

நான் உங்களிடம் கேள்விகள் கேட்பதற்கு இங்கு வரவில்லை. மாறாக ஓர் அறிக்கையினை உங்களிடம் சமர்ப்பிப்பதற்காகவே வந்துள்ளேன். உங்களுக்கு பல அரசியல் கட்சிகளும், மக்கள் மன்றங்களும் பலதரபட்ட அரசியல் தீர்வுத்திட்டங்களையும் அலோசனைகளையும் வழங்கியிருப்பார்கள். ஆனால் பல நூற்றாண்டுகளாக சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டும் தீண்டாமைக் கொடுமைக்கும் உள்ளான ஒரு மக்கள் சமூகம், கடந்த கால் நூற்றாண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் கொடூரமான யுத்தத்தால் மிகவும் துன்புற்று வாழுகிறார்கள். இம்மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியதை வலியுறுத்தும் அரசியல் தீர்வுத்திட்ட ஆலோசனைகள் எதுவும் உங்களுக்கு கிடைத்திருந்ததாக நாம் அறியவில்லை.

1977ம் ஆண்டு வரை சாதியின் பெயராலொடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க பலவித போராட்டங்களையும் உயிர்த்தியாகங்களையும் செய்துள்ளனர். அப்போராட்டத்திற்கு உறுதுணையாக தமிழ் இடதுசாரிகளும், சிங்கள இடதுசாரிகளும் முஸ்லிம் முற்போக்கு சக்திகளும் உதவியுள்ளனர். 1977ம் ஆண்டு தமிழீழ பிரகடனம் செய்யப்பட்டு தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறியதன் காரணமாக கடந்த முப்பது வருடங்களாக சாதிய விடுதலை பற்றிய பேச்சு பேசாப் பொருளாகி கிடப்பில் போடப்பட்டது. இந்த யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மக்களாக தலித் சமூக மக்களே உள்ளனர். உண்பதற்கு உணவும், இருப்பதற்கு வீடும், உழைப்பதற்கு தொழிலும் அற்றவர்களாக பெரும் துன்பத்தில் வாழும் தலித் மக்களுக்கு வெளிவரப்போகும் அரசியல் தீர்வுத்திட்டத்தில் அவர்களது சமூக அரசியல் பொருளாதரத்தை



படிப்பகம்



மேம்படுத்தும் முகமாக விசேட தீர்வுகள் முன்வைக்கப்பட்டு அது அரசியல் சட்டமாக்கப்பட வேண்டுமென இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

2006ம் ஆண்டு நவம்பர் ஜேர்மனியில் உள்ள சுட்காட் நகரில் சகல ஐரோப்பிய ஜனநாயக சக்திகளையும் உள்ளடக்கி நடாத்தப்பட்ட இரு நாள் மாநாட்டில் தலித் மக்களின் மேம்பாட்டுக்காக ஓர் "தலித் அறிக்கையை" வாசித்து வெளியிட்டோம். இவ்வறிக்கையானது 2007 ஒக்டோபர் மாதம் 20,21ம் திகதிகளில் பாரிசில் நடாத்தப்பட்ட 1வது தலித்மாநாட்டில் கலந்து கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட மக்களின் ஒப்புதலையும் பெற்றுக் கொண்டது.அதனைத் தொடர்ந்து 2008 பெப்ரவரி 16,17ம் திகதிகளில் லண்டனில் நடாத்தப்பட்ட 2வது தலித் மாநாடும் இவ்வறிக்கையை முழுமையாக ஏற்றுக் கொண்டது. நேற்றைய தினம் (05/04/2008) இம்மண்டபத்தில் நிகழ்ந்த இலங்கை ஜனநாயக ஒன்றியத்தின் ( SLDF) கூட்டத்திலும் "தலித் அறிக்கையை" முன் வைத்தோம்.

இன்று ஒரே மேடையில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவினரான உங்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பும் எமது "தலித் அறிக்கையை" உங்கள் முன்வைக்க கிடைத்த சந்தர்பமும் மிகவும் மகிழ்ச்சிக்குரியதே.

மதிப்புக்குரிய திச விதாரன அவர்களுடைய அரசியல் தீர்வுத்திட்டத்தை தமிழ், சிங்கள, முஸ்லிம் மற்றும் மலையக தமிழ் மக்கள் மிகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். சமாதானத்தினதும் ஜனநாயகத்தினதும் வருகைக்காக காத்துக் கிடக்கிறார்கள். எனவே நீங்கள் முன்மொழியும் அரசியல் தீர்வுத் திட்டத்தில் தலித் மக்களின் மன உணர்வுகளையும் புரிந்துகொண்டு "தலித் அறிக்கை"யில் எம்மால் முன்வைக்கப்பட்ட தீர்வுகளையும் இடம்பெறச் செய்து சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சந்தர்ப்பத்தை எமக்கு வழக்கிய இலங்கை ஜனநாயக ஒன்றியத்துக்கு நன்றியையும் தெரிவித்து, விடைபெற்று, தீர்வுக்காகக் காத்திருக்கிறோம்.

**சாதியின் பெயரால் உயர்வு தாழ்வு, மதத்தின் பெயரால் வேற்றுமை உணர்ச்சி, தேசத்தின் பெயரால் கொரூரத் தன்மை முதலான இழிகுணங்கள் மனிதனிடமே அதிகமாகக் காண்கிறோம். மற்றும் கடவுளின் பெயரால் மேல் கீழ் நிலை முதலாகிய அயோக்கியத் தன்மைகள் மனிதச் சீவனிடமே உண்டு. பகுத்தறிவின் காரணமாக மனிதச் சீவன் உயர்ந்தது என்று சொல்லவேண்டுமானால் மேற்கண்ட கெட்ட, தீய, இழிவான, அயோக்கியத்தனமான குணங்கள் என்பவைகள் எல்லாம் மனிதரிடம் இல்லாதிருக்கவேண்டும். அப்பொழுதுதான் மற்றப் பகுத்தறிவில்லாச் சீவராசிகளைவிட மனிதச்சீவன் மூளை விசேடம் முதலிய அவயத்தை நன்மைக்காக பிரயோகித்துக்கொண்ட சீவன் என்று சொல்லப்படும். அதில்லாத நிலையில், எவ்விதத்திலும் மனிதச் சீவன் மற்ற சீவ பிராணிகளைவிட உயர்ந்ததல்ல என்பதோடு பல விதத்திலும் தாழ்ந்தது என்றும் சொல்லவேண்டியிருக்கின்றது.**

**-பெரியார்-**

- *குட்டிக்கதை* -

# நிறம்

மலிவு விற்பனை காலங்களில் பொருட்கள் தேடி வாங்கி பதுக்கி வைப்பதில் ஆனந்தராணி எப்பொழுதுமே கவனமாக இருப்பாள். இப்பொழுது கோடைக்கால மலிவுவிற்பனை ஆரம்பாகிவிட்டது. வீட்டிற்கு வருகின்ற விளம்பரக் கடதாசிகளை ஒன்றும் விடாமல் புரட்டிப்பார்த்து எந்தக் கடைகளில் எத்தனை வீதம் மலிவுவிலை என்பதை வலு உன்னிப்பாக கூட்டிக்கழித்து இந்தச் சனிக்கிழமை தனக்கும் தன்மகளுக்குமான உடுப்புகளை வாங்கிக் குவிக்கலாம் என்று திட்டம் போட்டுக்கொண்டாள்.

இதன்படி தாயும், மகள் சுபாவுமாக மலிவுவிலைக்கடைகளை நோக்கி பயணித்தனர்.

பல கடைகள் ஏறி இறங்கியும் விலை சரியாக வந்தால் நிறம் சரியாக வராமலும் நிறம் சரியாக வந்தால் விலை சரியாக வராமலும் ஆனந்தராணியை குளப்பிக் கொண்டிருந்தது. கால்கடுக்கப் பல கடைகள் ஏறி இறங்கி இறுதியாக ஒரு கடைக்குள் புகுந்துகொண்டனர். ஆனந்தராணியை விட மகள் சுபாவுக்கே களைப்பு அதிகமாக வந்துவிட்டது. சுபா தனக்குப் பிடித்த உடையை தெரிவுசெய்யும் போதெல்லாம் விலை, நிறம், அமைப்பு என எதையாவது காரணம் காட்டி தாய் தட்டிக்கழித்து விடுவாள். அம்மாவை நேரடியாகத் திட்ட முடியாவிட்டாலும் தனது பிரென்ஞ்சு மொழியில் புறு புறுத்தபடி தாயின் பின்னே சென்றாள். இறுதியாகச் சென்ற கடைக்குள் சுபாவுக்கு ஒரு மேற்சட்டை பிடித்துப்போகவே அதை எடுத்து உடுப்பு மாற்றும் அறைக்குள் சென்று போட்டுப் பார்த்தாள். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணாடியில் முன்னும் பின்னுமாக தன் உடலை நெளித்து வளைத்து அழகு பார்த்தாள். அவள் உடலோடு ஒட்டிய அந்த உடை செவ்வந்திப் பூ நிறத்தில் சிவப்பும் மஞ்சலுமாக போடப்பட்ட வரிகள் அவள் உடலுக்கு மிகவும் அழகாகக் தெரிந்தது. ஆனந்தமாக வெளியே வந்த சுபா

"அம்மா இந்த சட்ட நல்ல வடிவா இருக்கு, எனக்கு பிடிச்சிருக்கு இதை எடுங்கோ!"

"இதென்னடி வடிவாவ இருக்கு அசிங்கமாக் கிடக்கு"

"இந்த கலரும், இந்த மொடலுதம்தான் அம்மா இந்த வருஸ மொட்"

"ஒரு பறக்கலர எடுத்து வச்சுக்கொண்டு நல்ல கலர் எண்டுற, ஆக்களுக்கு முன்னால போட்டுக்கொண்டு போறயில்லையே"

"அது என்னம்மா பறக்கலர்"

"ஊரில அந்த ஊத்தச்சாதியள் போடுற கலர், அத வையடி! வேற கட பாப்பம்"

களட்டிப்போட்ட மேட்சட்டையை திரும்பிப்பார்த்தபடி பிரென்ஸ்சு மொழியில் புறுபுறுத்துக்கொண்டு தாயின் பின்னே நடக்கிறாள்.

-சித்தன்-



**தோழமையுடன் வடு வாசகர்களுக்கு:-**

10 இதழ்களை தாண்டிவிட்ட வடு பத்திரிகையை தொடர்ந்து கொண்டு வருவதற்கு உங்களிடமிருந்து சந்தாப்பணங்களை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகட்கு :- F.D.S.D.S
70, SQUARE DES BAUVES
95140 GARGES LES GONESSE
France
(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)

# தலித்துக்கள் விழித்துக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து
- பாலா -

தமிழ் சமூகம் எந்த உலகத்தில் வாழ்ந்தாலும் சாதிய ஒடுக்குமுறைகள் அல்லது சாதிய ஏற்றத்தாழ்வு மோதல்கள் இடம் பெறுவது வழக்கம் அப்போதெல்லாம் அது ஒரு குழு மோதல் என்ற வகையில் பிரச்சனைகள் குறுக்கப்பட்டு உடனேயே மூடி மறைக்கப்படுகிறது. அதற்கு மாறாக அதன் அடிப்படைத் தன்மைகளை ஆய்வு செய்து அதன் அடி நாதமாகிய சாதிய அமைப்பு வடிவத்தை அழித்தொழிக்க யாரும் முன்வருவதாக இல்லை. இந்த வகையில் அண்மையில் சுவிஸ் நாட்டிலும் கூட சாதி மோதல் நடைபெற்றதாக சில தகவல்கள் கசிந்துள்ளது. தமிழன் விமானம் ஏறும்போதே உடுப்பதற்கு உடையும் உண்ண உணவும் கொண்டு போகிறானோ இல்லையோ கலாச்சாரத்தின் பேராலும் மதத்தின் பேராலும் சாதியை மட்டும் தூக்கிச் சென்றுவிடுகின்றான். அதன்மூலம் சாதி ஒடுக்குமுறையை செய்ய முடியாவிட்டாலும் சாதியை இழிவு படுத்தும் சொற்கள், செயல்கள் தாராளமாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

அவர்களது அதிகாரம் அல்லாத நாடுகளிலேயே சாதியை தக்கவைப்பதில் தீவிரம் காட்டும் தமிழன் சொந்தமண்ணில் எப்படி நடந்து கொள்வான் என்பதை இலகுவாக புரிந்து கொள்ளலாம்.

வேலணை என்னும் கிராமத்தில் ஒவ்வொரு சாதியும் ஒவ்வொரு குறிச்சிவாரியாகவே வாழ்ந்து வருகின்றனர். எத்தனையோ யுத்தம் எத்தனையோ இடப் பெயர்வு நிகழ்தாலும் சாதிகள் மட்டும் எந்தக் குறிச்சியும் மாறாமல் அப்படியே வாழ்ந்து வருகிறது. வேலணையில் தலித்துக்கள் வாழும் பகுதியில் உணவு சமைக்க ஒரு தண்ணீரும், குளிப்பதற்கு ஒரு இடமும், குடிக்கும் தண்ணீர் எடுக்க ஓர் இடமுமாக அலைக்கழிந்த வாழ்க்கையை நீண்ட காலமாகவே வாழ்ந்து வருகின்றனர். சமைக்கும் தண்ணீர் தமது வீட்டுக் கிணறுகளில் இருந்து பெற்றுக் கொள்கின்றனர். அதுவும் கடும் கோடைக்காலத்தில் கிணற்றுத் தண்ணீர் வற்றிவிடும். குளிப்பதற்கும் உடுப்புத் தோய்ப்பதற்கும் கடற்கரையை நோக்கி சென்று அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் பொதுக்கிணத்தில் அத்தேவையை பூர்த்தி செய்து கொள்வார்கள். குடிப்பதற்கான தண்ணீர் அதில் இருந்து முன்னூறு மீற்றர் தூரத்தில் நல்ல தண்ணீர் கிணறு என அழைக்கப்படும் (இதுவும் இச்சாதிக்கென ஒதுக்கப்பட்டது.) இடத்திற்கு சென்று பெற்றுக்கொள்கின்றனர். இப்படியாக தண்ணீருக்கு ஒவ்வொரு இடத்திற்கும் அலையும் இம்மக்கள் கூட்டத்தின் துன்பம் பல ஆண்டுகளாகவே தொடர்கதையாக தொடர்கிறது.

இவர்கள் குடிக்கும் நீர் எடுத்த நல்ல தண்ணீர்க் கிணற்றைச் சுற்றி புதுக் குடியேற்றமாக பல வீடுகள் உருவாக்கப்பட்டபோது இக்கிணற்றுக்குப் பக்கத்திலிலும் புதிதாக விஸ்ணு கோயிலும் உருவாக்கப்பட்டது. இக்கோயில் மெல்ல மெல்ல வளர்ந்து பெரிய கோயிலாக மாறிவிட தலித்துக்கள் காலம் காலமாக குடி தண்ணீர் எடுத்துவந்த நல்ல தண்ணீர்க் கிணறு விஸ்ணுவுக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டுவிட்டது. விஸ்ணு அத்தண்ணியில் குளிக்கிறாரோ, குடிக்கிறாரோ தெரியாது தலித் மக்கள் குடி தண்ணீர் எடுக்க முடியாமற் போய்விட்டது. இதனால் நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சாட்டி என்னும் இடத்தில் இருந்து தண்ணீர் காவ வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. இத்துன்பம் பற்றி யாரும் இதுவரை கண்டு கொள்ளவில்லை. இக் கொடுமைக்குள் தள்ளப்பட்டுள்ள தலித்மக்களும் ஏதும் நடவடிக்கை எடுக்க திராணி அற்றவர்களாகவும், கடவுள் விடயத்தில் தாம் கைவைத்தால் தம் தலை தெறித்து விடும் என்ற மூட நம்பிக்கையிலும் இதுதான் நம் விதியென வாழ்கின்ற கொடுமை வேலணையில் மட்டுமல்ல யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இப்படிப் பல பிரச்சனைகள். கற்றவர்களும், சமூக அக்கறையுள்ளவர்களும் தமிழர்களெல்லாம் ஒன்று என தம்பட்டம் அடிப்பவர்களும் கண்டும் காணாமல் ஒழிந்து கொண்டு நல்லபிள்ளை வேடம் போட்டு நடிக்கும் கபடர்களாகவே வாழ்கின்றனர். ஆனால் விழித்துக்கொள்ள வேண்டியவர்கள் இக்கொடுமைக்கு உட்பட்டிருக்கும் எமது தலித்மக்களே.

## "தூ" முகவரி மாற்றப்பட்டுள்ளது

கற்பிதப்படுத்தப்பட்ட அனைத்துப் புனிதங்கள் மீதான விமர்சனங்களை முன்வைப்பதும், இலங்கை தலித் அரசியல் பண்பாட்டுக் கலாசார மேம்பாட்டுக்குமான கருவியாகவும் உலாவும் மின் சஞ்சிகையே..... "தூ"

புதிய எமது இணையத்தள முகவரி

www.thuuuu.net

இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் (பிரான்ஸ்) சார்பில் வெளிவரும் ஏடு.